**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.8** |
| **Name** | **:** | **திரு. மாயக்கிருஷ்ணன்** |
| **Father's Name** | **:** | **வெங்கடேசன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.06.2023.**

**முதல் விசாரணை -**

**நான் கொண்டையாங்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். ஓட்டுனர் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் 12 வருடத்திற்கு முன்பு தேதி ஞாபகம் இல்லை. மாலை சென்றபோது அருங்குணம் கூட்ரோட்டில் என்னிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள். என்னுடன் வினோத் என்பவரும் கையொப்பம் போட்டார்.**

**எதற்காக கையொப்பம் என்று கேட்டதற்கு போலிசார் விசாரணைக்கு வந்ததற்காக கையொப்பம் என்று சொன்னார்கள். பார்வை மகசரில் உள்ள**

முதல் கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகசரில் உள்ள <u>கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.9</u>. இரண்டாவது கையொப்பம் வினோத் உடையது. கொம்பு எல்லாம் இருந்ததற்காக ஒரு கையொப்பம் போட சொன்னார்கள். அதற்கு நானும் வினோத்தும் கையொப்பம் போட்டோம். கொம்பிற்காக போடப்பட்ட கையொப்பம் நான் போட்டது தான். <u>கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.10</u>. நீதிமன்றத்தில் உள்ள கொம்புகள் (சான்று பொருள் 3) தான் அவை.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு பகுதிக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு பகுதி குறுக்கு விசாரணை</u>

10.8.2011 அன்று மாலை 3.30 மணிக்கு போலிசார் அருங்குணம் கூட்ரோட்டிடம் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்தபோது நானும் வினோத்தும் சாட்சி கையொப்பம் போட்டுவிட்டு தற்போது விசாரணை என்று மட்டும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1,2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போகும்போது 10,15 பேர் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அதில் 3,4 போலிசார் இருந்தார்கள். கையொப்பம் பெற்றது எல்லாம் அருங்குணம் கூட்ரோடு என்றால் சரி தான். அருங்குணம் கூட்ரோட்டில் தான் நீதிமன்றத்தில் உள்ள கொம்புகள் போடப்பட்டதா என்றால் அதன் பிறகு தான் போட்டார்கள்.

**<u>8ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.</u>**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.